[29th February 1964

திரு. ஆ. கு. சுப்பையா : இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டு எத்தனை ஆண்டுகள் ஆகின்றன ?

கனம் திரு. பூ. கக்கன் : 1958-ம் ஆண்டிலே இந்தத் திட்டம் சாங்ஷன் செய்யப்பட்டது. ஆயிரம் ஏக்கராக்களுக்குத் தண்ணீர் கொடுக்கும் திட்டம் ஆதலால், இதைப் பார்த்துப் பரிசீலனை செய்து நிறைவேற்ற வேண்டியிருந்தது.

பாக்கம் ஏரிக்கு நீர் விடுதல்

*120 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

குடியாத்தம் தாலூகாவிலுள்ள பாக்கம் ஏரிக்குத் தண்ணீர் கொண்டுவர அணை கட்டும் வேலை என்ன நிலையிலுள்ளது ?

கனம் திரு. பூ. கக்கன் : பாக்கம் ஏரிக்குத் தண்ணீர் கொண்டுவர அணைக்கட்டு கட்டும் உத்தேசமில்லை, ஆனால், அதற்குப் பதிலாகப் பாக்கம் ஏரிக்குத் தண்ணீர் சப்ளையை அபிவிருத்தி செய்ய அடியிற்கண்ட மூன்று வேலைகளை தலைமைப் பொறியாளர் (பாசன) மேற்கொண்டுள்ளார் :—

(1) வரவு வாய்க்காலுக்கு விசேஷ மராமத்துக்கள் செய்தல் (இவை ஏற்கனவே செய்து முடிக்கப்பட்டுவிட்டன.)

(2) வரவு வாய்க்காலின் ஆரம்ப இடத்தை வேறு இடத்திற்கு மாற்றுதல்.

(3) இவ்வாய்க்காலில் இன்னொரு பாதையை அமைத்தல்.

There is no proposal for the construction of an anicut for the purpose referred to but instead the following three works have been undertaken by the Chief Engineer (Irrigation) for improving water-supply to the Pakkam tank.

(1) Special repairs to the supply channel (already completed.)

(2) Shifting the off-take point of the supply channel.

(3) Construction of a super passage in the channel.

MR. SPEAKER : Questions are over.

II—POINT OF ORDER *re* QUESTION HOUR.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : பாயின்ட் ஆஃப் ஆர்டர், ஸார். சட்டசபை நடவடிக்கைகளில் கேள்வி நேரம் மிக முக்கியமானது. அதைத் தாங்களும் அறிவீர்கள் . . . .

MR. SPEAKER : Let the hon. Member come to the point of order.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : பல மாதங்களுக்கு முன்பாகவே நாங்கள் கேள்விகளுக்கு அறிவிப்புக் கொடுத்திருந்தும், அவற்றுக்குப் பதில்களைப் பெற்று, தகுந்த எண்ணிக்கையில் கேள்வி நேரத்